விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆடி 13 ஷவ்வா 28 இதழ் 164
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 28-7-84

★ பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள்

## ஒருவாரத்தில் 100 பேருக்கு இடமாற்றம்

### அடுத்த பட்டியல் இரு வாரத்தில்

(கொழும்பு)

ஜூலைக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களில் நூறு பேருக்கு அடுத்த ஒருவார காலத்தில் இடமாற்ற உத்தரவு கிடைக்கவுள்ளது. வடக்கு கிழக்கிலுள்ள கல்வித் திணைக்களங்களுக்கு இந்த இடமாற்றப்பட்டியல் கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்படுமென்று கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பட்டியலில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களின் பெயர்கள் இடம்பெறுகிறதென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு அடுத்தபட்டியல் இரண்டு மூன்று வாரங்களில் அனுப்பப்படுமென்று தெரிய வருகிறது.

# முதலில் உண்ணுவிரதம்; அடுத்துப் போராட்டம்!

## பஞ்சாப் பற்றி ராஜீவ்

(புதுடில்லி)

பஞ்சாப் பிரச்னை தொடர்பாக சீக்கியர்களை அடக்குவதற்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி எடுத்த நடவடிக்கைகள் சரியானவை என்று கூறி அவாது மகன் திரு ராஜீவ் காந்தி நேற்று இந்திய லோகசபையில் வாதாடினார். (வெ)

## மக்கள் சக்தியைத் திரட்ட கூட்டணி நடவடிக்கை

(ஏ. வி. மாணிக்கம்)

**அஹிம்சைவழியில் போராட்டங்களை ஆரம்பித்து மக்கள் சக்தியைத் திரட்டும் நோக்கமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முதலில் உண்ணுவிரதப் போராட்டத்தையும் அடுத்து அறப்போராட்டங்களையும் நடத்த தமிழர் விடுதலைக்கூட்டணி தீர்மானித்துள்ளது.**

தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவர்கள் நேற்று திருநெல்வேலியிலுள்ள கூட்டணியின் தலைமைக்காரியாலயத்தில் கூடி சில மணிநேரம்வரை எதிர்கால நடவடிக்கை குறித்து ஆலோசனை நடத்தினர்.

ஒன்று அல்லது நாளை கூட்டணியின் நடவடிக்கைக் குழு கூடி உண்ணுவிரதம் அனுஷ்டித்தல், சாத்வீகப் போராட்டம் சம்பந்தமாக ஆலோசனை செய்து முடிவெடுக்கும் என்று கூட்டணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், நிர்வாகச் செயலாளர் திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம், திரு. இரா. சம்பந்தன் ஆகியோர் நேற்றுக்காலை கூடி ஆலோசனை நடத்திய போதிலும், கூட்டணி நடவடிக்கைக்குழு கூடி முடிவெடுக்கும் நிலைமைக்கு ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வீரமாகாளி அம்மன் கோவிலில் கடந்த செவ்வாய்க்கிழமை கூட்டணி அனுஷ்டித்த உண்ணுவிரதத்தின்போது ஏற்பட்ட பிரச்னைகள் குறித்து ஆலோசனை செய்தபோதிலும், மனம்தளராமல் தொடர்ந்து மற்றும் தமிழ்மக்கள் வாழும் பகுதிகளில் உண்ணுவிரதப்போராட்டத்தை முன்னெடுத்துச்செல்ல வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

உண்ணுவிரதப் போராட்டத்தை திருகோணமலையிலா, மட்டக்களப்பிலா நடத்துவதென்று முடிவெடுப்பது திரு.

(8ம் பக்கம் பார்க்க)

## இயக்கத்தின் பெயரைக் கூறி 1 லட்சம்ரூபா நகை கொள்ளை!

(கிளிநொச்சி)

துப்பாக்கி சகிதம் மூன்று இளைஞர்கள் வீடொன்றினுள் புகுந்து அங்கிருந்தவர்களை மிரட்டி சுமார் ஒரு லட்சத்து 629 ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியிலுள்ள திருவையாறுப் பகுதியில் வை. குமாரசாமி என்பவரது வீட்டில் இடம்பெற்றது.

சம்பவதினம் இரவு 8-30 மணியளவில் மூன்று இளைஞர்கள் குமாரசாமியின் வீட்டுக்குச் சென்றனர். அங்கு அவரது மனைவியின் வெளிநாட்டிலிருக்கும் சகோதரராது நண்பர்கள் என்று தம்மை அவர்கள் அறிமுகப்படுத்தினர்

தொடர்ந்து சிறது நேரம் தேநீர் அருந்தி உரையாடி விட்டுத் திடீரெனத் தமது சப்பாத்துக்களுக்குள்ளிருந்து ரிவோல்வர் துப்பாக்கியை எடுத்து தாம் விடுதலை இயக்கமொன்றைச் சேர்ந்தவர்களென்றும் தமக்குப் பணம் தரும்படியும்

(8-ம் பக்கம் பார்க்க)



இரண்டு நாள் நடைபெற்ற ஹர்த்தாலில் வெறிச்சோடிக் காணப்படும் யாழ். நகரம். இடமிருந்து வலம் பிரதான வீதி, பஸ்நிலையம், யாழ்ப்பாணம் சந்தை.

## யாழ். — கொழும்பு ரயில்சேவை வழமைபோல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்— கொழும்பு ரயில்சேவை மீண்டும் இன்று முதல் வழமைபோல் நடைபெறும் என்று புகையிரதப் பகுதி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

முன்னர் அறிவித்திருந்தது போல், யாழ் தேவி, இன்ரசிற்றி ரயில் சேவைகள் குறிப்பிட்ட நாட்களில் சேவையிலீடுபடுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

'இன்ரசிற்றி' ரயில் சேவை நேற்று கிளிநொச்சிவரை மட்டுமே நடந்தது. 'யாழ்தேவி' சேவையும் நேற்றுமுன்தினம் கிளிநொச்சிவரை மட்டுமே நடந்தது. (மா)

## நிலைமை வழமையானது; ஆனாலும்நேற்றுயாழ்நகரில்..

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற இனக் கலவரங்களின் போது பலியான தமிழ் மக்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக வடக்கு கிழக்குமாக ணங்களில் கடந்த இரண்டு நாட்களாக ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட பின்னர் நேற்று நிலைமை வழமைக்கு திரும்பியது.

அதேவேளை யாழ் நகரில் நேற்று திடீர், திடீரென வந்த ஆயுதப்படையினரின் நடமாட்டத்தினுல் அச்சமும், பீதியும் மக்கள் மத்தியில் ஏற்படத் தொடங்கியது.

இந்தப் பதட்டநிலை நேற்றுக் காலை 11-30 க்கு ஆரம்பமாகி சுமார் 3மணி நேரம் நிலவியது.

கடந்த 25ம், 26ம் திகதிகளில் தமிழ்ப் பகுதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதும், இதனுல் யாழ்ப்பாணப் பகுதி அலுவல்கள் ஸ்தம்பிதம் அடைந்திருந்ததும் தெரிந்ததே.

நேற்றுக் காலை பொது மக்கள் யாழ்நகரில் சுறுசுறுப்பாக நடமாடத் தொடங்கினர். வ. பி. போ. வ. சபைக்குச் சொந்தமான பஸ்கள், தனியார் பஸ்கள் மற்றும் வாகனங்கள் சேவையிலீடுபட்டிருந்தன.

அரசாங்க, கூட்டுத்தாபன தனியார்துறை ஸ்தாபனங்கள் இயங்கின.

சந்தை, கடைகள், வர்த்தக ஸ்தாபனங்கள் திறக்கப்பட்டு வியாபாரங்கள் நடைபெற்றன.

போசனசாலை, ஹோட்டல்கள், தேநீர்க் கடைகள் திறந்திருந்தன. பாடசாலைகளிலும் ஆசிரியர்கள், மாணவர்கள் வரவு திருப்திகரமாக இருந்தது.

நண்பகல் 11-30 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரி வீதி வழியாக ட்ரக்குகளிலும், கவச வாகனங்களிலும், ஜீப்வண்டிகளிலும் வந்த ஆயுதப்படையினர் யாழ்நகரில் திடீர் திடீரென முற்றுகையிடத் தொடங்கினர்

யாழ். ஆஸ்பத்திரி வீதி யாழ். காங்கேசன்துறை வீதி முட்டாஸ் கடைச் சந்தி, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி பலாலி வீதி, ஆஸ்பத்திரி வீதி

(8ம் பக்கம் பார்க்க)



தமிழர் விடுதலை கூட்டணியின் உண்ணுவிரதத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள். இளைஞர்கள் கூடி நிறபதை முதல் படத்திலும் செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்தை இரண்டாவது படத்திலும் இளைஞர்களின் குறுக்கீடுகளுக்கு மத்தியில் திரு. அமிர்தலிங்கமும் திரு. ஆர். சம்பந்தனும் உரையாற்றுவதை மூன்ருவது படத்திலும் காணலாம்.

# விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல இன ''ஜப்பானிஸ் பிற்ஸ் நாய்க்குட்டிகள் (Pure-bred pups) உடன் விற்பனைக்குண்டு- 60, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

1085

கோண்டாவிலுக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் பலாலிவீதிக்கருகாமையில் வீடு கட்டக்கூடிய 2 துண்டுக்காணிகள் (2) ஸ்ரான்லிவீதியில் 3 பரப்புக்காணி (3) நாவற்குழியில் பதினெரு பரப்புக்காணி (4) நல்லூரில் வீடும்- காணியும். தொடர்பு 52, வைமன் வீதி யாழ்ப்பாணம். தொலைபேசி 22334.

1080

Morris oxford 8 Sri எண் ஆயிரம் தொடர் உடன் விற்பனைக்கு உண்டு. 116, 4-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

1075

ஹொண்டா 50 (Honda C50) மறுசீரமைப்புடன் வாங்கப்பட்டு உடனே மிகச்சிறந்த நிலைக்கு விசேடமாகத் திருத்தியமைக்கப்பட்டது. தனியொருவர்பாவிப்பில் நல்லநிலையிலுள்ளது. 88 ஸ்ரீ தொடரிலக்கம் கொண்டது. நேரில்பார்த்தபின், கைவிலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். சனி, ஞாயிறு தொடக்கம் கீழ்வரும் முகவரியில் பார்வையிடலாம். ஆ. மதிமோகன் 12/1 கன்னுதிட்டிவீதி வண்ணை சிவன் கோவில் கோபுரவாசலடி, யாழ்ப்பாணம்.

1078

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கெருடாவில் தொண்டைமன்னுரைச் சேர்ந்த காலஞ்சென்ற உலகநாதர் செல்லத்துரையின் மரணசாதன விடயத்தில் மரணமெய்தியவர்

மரணசாதனத் தத்துவம் } இல. 3807

இராசதுரை சற்குணம், உடுப்பிட்டி தற்போது அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

மனுதார்

இந்நீதிமன்றத்தில் மேற்குறித்த இலக்கங் கொண்ட மரணசாதனத்தத்துவ வழக்கு மேற்சொல்லப்பட்ட மரணமெய்தியவரின் மரண சாதனத்தை நிரூபித்து மரண சொத்தின்தத்துவம்பெற மேற்குறித்த மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டு அதற்கான பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984-ம் ஆண்டு ஆவணி மாதம் 03-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருன கட்டளையாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைபடுத்தப்படுகிருர்.

1984-ம் ஆண்டு ஆனி மாதம் 04-ந் திகதி

தயாரித்தவர்

அ. மரியாம்பிள்ளை

மனுதாரின் சட்டத்தரணி

மன்றின் கட்டளைப்படி

கு. குலசிங்கம்

பதிவாளர்.

1049

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## கல்வி

G. C. E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணிதம், 15 வருட அனுபவம் உள்ள ஆசிரியரினுல் நுணுக்கமான முறையில் ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்காகக் குறைந்த காலத்தில் வீடுகளிற் கற்பிக்கப்படும். K. ஆறுமுகநாதன், 10; கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம். 1073

## FOR SALE

Household articles viz. KitchenCabinet Unit (German) KDK Fans, Meal Maker, Cotton lace for quick sale. Call at 65, Colombogam Road, Pandiyanthalvu' Jaffna, 1079

**சிங்கம்ஸ் பித்தளைத் தொழிற்சாலை**

**குத்து விளக்குகள், பெரிய மணிகள்**

[100, 500, 1000 இருத்தலுக்குட்பட),

**தேர்மணிகள் செய்து கொடுக்கப்படும்.**

தொடர்பு:-

**பொன்னையா வின்சென்ற்,**

பாண்டியன் தாழ்வு,

சுண்டிக்குழி,

யாழ்ப்பாணம்.

1052

## தேவை

ஜவுளி வியாபாரத்தில் அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் தேவை, திறமைக்கு ஏற்ப சம்பளமும், தங்குமிடவசதியும் வழங்கப்படும். தொடர்பு ராகுலசூரியன்ஸ், 122 பிரதான வீதி, பருத்தித்துறை. 1064

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## கேள்வித் திகதி நீடித்தல்பற்றிய அறிவித்தல்

எமது 09-07-84 ஆம் திகதிய கேள்வி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட நல்லூர் இந்து விடுதிக்கு தெற்குப்பக்கமாகவுள்ள நான்கு கடைகள், முற்றவெளி ஆட்டிறைச்சிக் கடை இல. 5 குருநகர் சந்தை மேல்மாடி உட்புற கடை இல. 58 ஆகியவற்றிற்கான கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் திகதி 31-07-84 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும், கேள்விப்படிவங்கள் விநியோகிக்கப்படுவது 30-07-84 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிவரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

சீ. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி
மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
25-07-1984.

1076

## காணித் துண்டுகள் விற்பனைக்கு

1. தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்த 8 பரப்பு நில அளவும் போக்குவரத்து வசதிகளுடன் கூடியதும்.
2. கீரிமலை காங்கேசன்துறை வீதியில் கடல்கரைப் புறமாக உப-தபால் அலுவலகத்துக்கு அருகாமையில்அமைந்த 7 பரப்பு நிலஅளவையுடையது.

(தனிநபர் உறுதிகளையுடைய காணிகள்)

விலை விபரங்களுக்கும் உறுதிகளைப் பரிசீலனை செய்யவும் தொடர்பு கொள்க:-

**சு. பொன்னம்பலம்,**
**''பொன் சிவபதி'', இணுவில் தெற்கு, இணுவில்.**

1069

## ஓர் ஆண்டு நினைவஞ்சலி

**சண்முகராசா சுதாகரன்**
(Accountant, Alliance Export Co. Ltd., Ratmalana)



மலர்வு:
09 – 09 – 1956

உதிர்வு:
29 – 07 – 1983

எங்கள் அருமை மகனே! நீவிர் இலைமறைகாய்போலிருந்து மேலோங்கி பிரகாசித்து வந்தீர். ஆனுல் ஊர் உலகம் அறியாமல் மட்டுமல்ல உமது ஏங்கித் துடிக்கும் அம்மா தங்கை கண்களுக்கும் எட்டாமல் மறைத்து விட்டார்களே ஒரு குற்றமும் அறியாத நெஞ்சே! நீர் எவ்வளவு பெருமையாகச் சீவிக்க ஆவல் கொண்டிருந்தீர். இரத்மலானை புகையிரத நிலையத்தில் வீற்று இருக்கும் சாந்த சொரூபியால் எங்களுக்கு அவலம் நேரிடாதென்றல்லவோ இருந்தோம். ஆனுல் நீர் புத்தபெருமானிடத்தில் உமது இரத்தத்தைகாணிக்கைவைத்து இரண்டறக் கலந்துவிட்டீர். ஆனுல் உமது அப்பா பாவம் செய்தபடியினுலோ என்னவோ, புத்தருடன் இரண்டறக் கலக்காமல் எலும்புகள் முறிவுடன் மயிரிடையில் உயிர் தப்பி வந்தார். அருமையான மகனே உமது அகால மரணத்தால் உமது அம்மா, அண்ணு, தங்கை நிதமும் ஆறெருணுத் துயரத்தில் இருக்கிருர்களே! சாண் ஏற முழம் சறுக்கிறதாகப் போச்சோ! எங்களுக்கு விமோசனமில்லையா?

**சண்முகராசா**
சூருவத்தை, சுன்ணுகம்,
1004 (முன்னுள் புகையிரத நிலைய அதிபர், இரத்மலானை)

கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனுமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,

**கொழும்பு ஸ்ருடியோ**

## ஓராண்டு நினைவஞ்சலி

சென்ற ஜூலைக் கலவரத்தின்போது பாதகமான அகால மரணத்தைத் தழுவிய

**வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்**



மலர்வு: 14-01-1948

உதிர்வு: 29-07-1983

கல்லறையில் உனை வைத்து கண்ணீரால் நனைத்திட்டோம், உலகில் வைக்க இல்லாமல் உள்ளத்தில் வைத்து உருகுகின்றோம்.

அன்பின் மனைவியும் – குடும்பத்தவரும்.

வேலணை மேற்கு,
வேலணை - 8. 1082

## 1வது நினைவு அஞ்சலி

**கே. எம். செல்லப்பா கணேஷ் B.Sc.**
(நீதிமன்ற நியாயதுரந்தரர், கொழும்பு)



தோற்றம்:
27 - 02 - 1930

மறைவு:
29 - 07 - 1983

கடந்த ஆடிக்கலவரத்தில் பொறளை ஆயுள்வேத வைத்தியசாலை முன் இனவெறியர்களால் அகால மரணமடைந்த எமது அன்புச் சகோதரரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தனை செய்யும்

உடன் பிறந்தார், சுற்றத்தார்,
மற்றும் ஏனைய நண்பர்கள்.

புத்தூர் மேற்கு. 1068

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர் செல்வி
**மஞ்சுளா கந்தசாமி**
[வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவியும்; வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி பொறியியல் மாணவியும்]

மலர்வு: 14-01-1964 உதிர்வு: 30-06-1984



எம்மைச் சடுதியாக ஆருத் துயரில்ஆழ்த்திவிட்டு மலர்ந்தும் மலராமல் உதிர்ந்து விட்ட எங்கள் அன்பு மஞ்சுவே, நாளை மறுதினமான 30-7-84 திங்கட்கிழமை முப்பத்தொரு நாட்கள் மறைந்து டும். உன் நினைவுகளை மறக்கமுடியுமா! எம் இதய பாசம் உன்னைக் காணுது, கலங்குகின்றன! உன்னை மறக்கமுடியாமல், கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சிக்கின்ற இந்நாளில் உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இவ்வ

அப்பா, அம்மா, ஐயா, அம்மம்மா, சகோதரர்கள், பெரியப்பா, பெரியம்மா, மாமன்மார், மா மார்.

கோயில் வீதி, கொக்குவில். 1050

# அமெரிக்க கடல்பகுதியில் சோவியத் மீன்பிடிக் கப்பல்களுக்கு மீண்டும் அனுமதி!

வாஷிங்டன், ஜூலை27

**அமெரிக்க நீர்ப்பிரதேசங்களில் சோவியத் மீன்பிடிக் கப்பல்களுக்குப் போடப்பட்டிருந்த தடையை நீக்க அமெரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இத்தகவலை அமெரிக்க வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.**

சோவியத் யூனியனின் மீன்பிடிக் கப்பல்கள் அமெரிக்காவின் கடல் பிரதேசங்களில் மீன்பிடித்துவந்தன. ஆனால் 1980ம் ஆண்டுமுதல் இவற்றுக்கு அமெரிக்கா தனது கடல் பிராந்தியத்தில் மீன் பிடிக்கவும், நடமாடவும் தடைவிதித்தது.

ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியன் பிரவேசித்ததைக் கண்டிக்கும் விதத்திலேயே அமெரிக்கா இத்தடையை சோவியத் மீது விதித்தது.

தற்போது நான்கு வருடங்களுக்குப் பின்னர் இத் தடையை நீக்க அமெரிக்கா முன்வந்துள்ளது. ஆனால் சோவியத் இராணுவக் கப்பல்கள் எதுவும் அமெரிக்கக் கடல் பிராந்தியத்தில் நடமாட அனுமதிக்கப்படமாட்டாதென்றே அறியப்படுகின்றது.

சோவியத் யூனியனுடன் இராணுவ நடவடிக்கைகள் தவிர்ந்த ஏனைய உறவுகளைச் சீர்செய்யும் முயற்சியாகவே இத்தடை நீக்கம் காணப்படுகின்றது என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. இதனைத் தொடர்ந்து சோவியத் மீதான வேறுசில அமெரிக்கத் தடைகளும் படிப்படியாக நீக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை அமெரிக்காவின் இந்நடவடிக்கை குறித்து சோவியத் தரப்பில் இதுவரை எதுவும்தெரிவிக்கப்படவில்லை.

## சிரமதானம்

(பண்டத்தரிப்பு)

மூளாய் தெற்கிலுள்ள ஐயனார் ஆலயத்திற்கு வயல்களுக்கு ஊடாக செல்லும்

(6ம் பக்கம் பார்க்க)

## விண்வெளியில் நடந்த முதல் பெண்மணி!

மாஸ்கோ, ஜூலை, 27

சோவியத் விண்வெளிவீராங்கனையான ஸ்வெற்லானா சவிட்ஸ்காயா, விண்வெளியில் நடந்த முதலாவது பெண்மணி என்ற பெருமையைப் பெற்ருர்.

கடந்த புதன்கிழமை இவர் சல்யூட்-7 என்ற விண்வெளிக் கலத்திலிருந்தும் வெளியேறி விண்வெளியில் நடமாடினுர். 35 வயதான ஸ்வெற்லானா 3 மணித்தியாலங்கள், 35நிமிடம் விண்வெளியில் செலவிட்டார். இவர் இப்போது இரும்புத் துண்டொன்றை வெட்டுவதுடன் அதனை ஒட்டச்செய்யும் விசேட கருவியொன்றையும் பரிசோதித்துப் பார்த்தார்.

இவர் முன்னர் ஒரு தடவை விண்வெளிப் பயணத்தைமேற்கொண்டிருந்தார். ஆனுல் இத் தடவையேமுதல் முறையாக விண்வெளியில் சஞ்சரித்தார்.

பெண்மணி ஒருவரை முதல் தடவையாக விண்வெளிக்கு அனுப்பிய பெருமையைப் பெற்ற சோவியத் யூனியன், ஸ்வெற்லானுவின் விண்வெளி நடமாட்டத்தையடுத்துபெண்ணெருவரை விண்வெளியில் முதல்தடவையாக நடமாடச் செய்த நாடு என்ற பெருமையையும் பெறுகிறது. (கி)

## மேற்கு ஜெர்மனியில் சிங் விடுதலை: இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் கண்டனம்!

புதுடில்லி, ஜூலை 27

மிகப் பெரிய பயங்கரவாதியெனத் தேடப்பட்டுவந்த தல்பிந்தர் சிங்கை மேற்கு ஜெர்மன் அரசு விடுதலைசெய்திருக்கக்கூடாதென்று தெரிவித்து எழுபத்தைந்து இந்திரா காங்கிரஸ்உறுப்பினர்அறிக்கையொன்றை விடுத்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து தப்பியோடி ஜெர்மனியிலிருந்த சமயம் அங்கு கைதாகிய சிங் விசாரணையின்பின் அந்நாட்டு அரசினுல் விடுதலை செய்யப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்பற்றியே காங்கிரஸ்உறுப்பினர்அறிக்கை விடுத்தனர்.

தீவிரவாதிகளுக்கும், பிரிவினைவாதிகளுக்கும் ஊக்கமளிக்கும் விதத்தில் மேற்கு ஜெர்மனியின் நடவடிக்கை அமைந்துள்ளது என்று இவ்வறிக்கையில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'வெளிநாடுகளில் பணம் சம்பாதித்தவர்களே தனிநாடு கோருகின்றனர்!'

### பிரதமர் இந்திரா கூறுகிருர்

புதுடில்லி, ஜூலை 27

''தனிநாடு கோருபவர்கள் இங்குள்ள சீக்கியர்கள் அல்லர். வெளிநாடுகளில் பெரும்பணம் சம்பாதித்துக்கொண்டு இங்கு வந்துள்ள ஒருசிலரே'' என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்துள்ளார்.

பாரதத்திலுள்ள சகல மதங்களைப்போன்று சீக்கிய மதத்தையும் நாம் மதிக்கிருேம். அந்த மதத்திற்குரிய இடத்தை அளிக்கிருேம்'' என்றும் குறிப்பிட்டார்.

''நட்புறவையும் தோழமையையும் தான் விரும்புகிருேம். பிளவு சக்திகளுக்கு எதிராக நாம் ஒன்றுபடவேண்டும். தாய்நாட்டைக் காப்பாற்றவேண்டியது எங்கள் ஒவ்வொருவரது பொறுப்புமாகும்'' என்ருர்.

## ★ ஒலிம்பிக்

### 50 லட்சம் டாலர்கள் செலவு

லாஸ் ஏஞ்சல்ஸ் கொலிஸியத்தில் (Coliseum) 23-வது ஒலிம்பிக்கின் ஆரம்பவைபவத்துக்கான செலவு 50 லட்சம் டாலர்களாகும். இவ்வைபவங்கள் 165 நிமிடங்கள் நீடிக்கும். சுமார் 92 ஆயிரம் பார்வையாளர்கள் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வைபவம் எப்படி அமையுமென்று முன்கூட்டியே ஏற்பாட்டாளர்கள் வர்ணிக்கவில்லை. காரணம் அதன் சிறப்பு மங்கிவிடக்கூடாதென்பதே!

### கழுகு இறந்தது

ஆரம்ப வைபவங்களில் இடம்பெறச்செய்வதற்கென 'பொம்பர்' என்று பெயரிடப்பட்ட கழுகுப்பறவை ஒன்று பயிற்றப்பட்டுவந்தது. ஆனுல் இனந்தெரியாத நோயினுல் இப்பறவை கடந்த வாரம் இறந்துவிட்டது. அமெரிக்காவில் அருகிவரும் 5000-க்கும் குறைவான கழுகு இனமொன்றை இது சேர்ந்தது. வனவிலங்கு அதிகாரிகளின் அனுமதி பெற்றே இது பயிற்சி அளிக்கப்பட்டுவந்தது.

23-வது ஒலிம்பிக்கின் சின்னமாக 'சாம் த ஈக்கிள்' ('Sam' The Eagle) என்று பெயரிடப்பட்ட கழுகுப் பறவையே விளங்குகின்றது. இச்சின்னத்தை வால்டிஸ்னி (Walt Disney) நிறுவனத்தினர் வடிவமைத்திருந்தனர்.

### கறுப்புச் சந்தையில் கூடுதல் விற்பனை

ஒலிம்பிக் பந்தயங்களுக்கான பிரவேசச்சிட்டுகள் குறிப்பிட்ட விலையிலும் பார்க்க 200, 300 வீதம் அதிகமாகக் கறுப்புச்சந்தையில் விற்கப்படுகிறது. ஆரம்ப நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கான பிரவேசச்சீட்டுக்கள் 400 டாலர்களுக்கு விலை போயுள்ளது. (சுமார் 8000 ரூபா.)

மெய்வல்லுநர்ப் போட்டிகள், ஜிம்னு ஸ்ட்டிக் போன்ற பிரபல போட்டிகளுக்கான பிரவேசச்சீட்டுகள் முறையே 4,250 டாலர்களுக்குக் கறுப்புச் சந்தையில் விற்பனையாகியுள்ளன.

### 16 சொற்கள் மட்டும் பேச அனுமதி

அமெரிக்க அதிபர் திரு. றெனுல்ட் றீகன் 23-வது ஒலிம்பிக்' பந்தயங்களை லாஸ் ஏஞ்சலிஸ்ஸில் ஆரம்பித்துவைக்கிருர். இவருக்கு 16 சொற்கள் அடங்கிய ஆரம்ப உரையை நிகழ்த்தவே அனுமதி வழங்கம்பட்டுள்ளது. நேர நெருக்கடி ஏனைய நிகழ்ச்சிகளை குழப்பிவிடக்கூடாதென்பதே இதற்குக் காரணமாகும்.

ஆரம்ப வைபவ நிகழ்ச்சியில் சுமார் பத்தாயிரம் கலைஞர்கள் கலந்துகொள்வார்கள். பார்வையாளர்கள் எண்ணிக்கை 92 ஆயிரமாக இருக்குமெனக் கூறப்பட்டது. மார் 2.5 பில்லியன் பேர் இந்நிகழ்ச்சியைத் தொலைக்காட்சியில் பார்ப்பார்கள் என்று கருதப்படுகிறது.

## செய்திகள் ★

### மகளிர் தலைவிகளுக்கான ஒருநாள் கருத்தரங்கு

(வவனியா)

வவனியா பாவட்ட முப்பத்தைந்து மகளிர் தலைவிகளுக்கான ஒருநாள் பெண்கள் அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு நடைபெற்றது.

வவனியா காமினி மகாவித்தியாலயத்தில் நடந்த இந்த வைபவத்துக்கு டாக்டர் ஐ ஞானேஸ்வரன் தலைமை வகித்தார்

வவனியா தெற்கு தமிழ்ப் பிரிவு உதவி அரச அதிபர்

(7ம் பக்கம் பார்க்க)

குறெஸ் ட்ரவல் சேர்விசஸ் [பிறைவேற்] லிமிட்டெட்

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?

கொழும்பு சென்று பிரயாண ஒழுங்குகள் செய்ய வேண்டுமே என்ற கவலையே வேண்டாம்!

உலகின் எப்பாகத்திற்குச் செல்ல வேண்டுமானுலும் உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ். நகரிலேயே பதிவு செய்துகொள்ள உடன் எமது ஸ்தாபனத்தை நாடுங்கள்.

குறிப்பு: பிரான்ஸ், இத்தாலி, செல்வதற்கான விசா, பயணச்சீட்டுக்கள் மற்றும் சகல ஒழுங்குகளும் மிகக்குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும்.

Cross Travel Services(Pte) Ltd.

PASSENGER SALES AGENT FOR SWISSAIR

Telephone: No: 22040, 22065.

TELEX No. 22207 (C. T. S) C E

CTS

எமது ஸ்தாபனத்தின் இணைந்த சேவையாக தற்பொழுது "குறெஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை" ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிருேம்.

- ★ வெளிநாட்டிலுள்ள உங்கள் உறவினருடன் தொடர்பு கொள்ள வேண்டுமா? உங்கள் இல்லங்களிலுள்ள தொலைபேசியிலேயே உறவாடி மகிழ்ந்திட எம்மை நாடுங்கள்.
- ★ உலகின் சகல பாகங்களுக்கும் குறைந்த கட்டணத்தில் நேரடித் தொலைத் தொடர்பு சேவையையும், டெலெக்ஸ் சேவையையும் ஒரு நொடிப்பொழுதில் தாமதமின்றி பெற்றுக்கொள்ளலாம்.

Cross International Telecommunication Services

(குளிரூட்டப்பட்டது–பஸ்நிலையம் முன்பாகவுள்ள மேல்மாடி)

STAGE II, MODEL MARKET

No, 5, 1st FLOOR

BUS STAND CENTRE ROAD, JAFFNA.

Phone No: 22040, 22065. Telex No: 22207 (C. T. S)C E

### மணிவாக்கு

நல்ல வழியில் நன்கு நிர்வகிக்கப்பெற்ற மனம் தான் நமக்கு மாபெரும் உதவி செய்யும். தாயோ, தந்தையோ, அல்லது வேறு எந்த உறவினருமோ அவ்வளவு தூரம் நமக்கு உதவிசெய்ய முடியாது.

— புத்தர்

## நமதுநோக்கு

# நெய்க்குடம் உடைந்துவிட்டதா?

உலகின் முதலாவது பெண் பிரதமராகப் பெயர் பெற்ற திருமதி பண்டாரநாயக்கா மீண்டும் பிரதமராகவோ அல்லது ஜனதிபதியாகவோ வரலாமென்ற அச்சம் அவரின் எதிரிகளுக்கு என்றும் இருக்கவே செய்யும்.

கடந்த ஏழு வருடங்களாக பாராளுமன்றத்தில் நடந்த விவாதங்களைக் கூர்ந்து பார்த்தால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி எவ்விதத்திலும் தலையெடுக்க முடியாத வகையில் ஆட்சியாளர் நடந்துவந்திருக்கின்றனர்.

பொதுமக்களைப் பொறுத்தளவில் இன்றைய நிலையில், 'ஆட்சி மாற்றம் நாட்டின் நிலைமையை இன்னும் மோசமாக்க இடமில்லை; எனவே சிறிலங்காவிற்கு இன்னொரு ஆட்டம்கொடுப்பதில் என்ன நட்டம்' என்று நினைக்கலாம்.

இன்றைய தேசியப் பிரச்னை தமிழர் பிரச்னை; தேசிய அந்தஸ்து அதற்கு இல்லாவிட்டாலும், நாட்டின் பெரும்பான்மை மக்களால் அமைக்கப்படும் ஆட்சிக்கு தமிழர் பிரச்னை ஒரு நல்லஉதை பந்தாக இருந்து வருகிறது.

ஆட்டம் நாமறியாமலே நடைபெறுகின்றது; சர்வகட்சி மாநாட்டின் ஆரம்பத்தில் ஆளும்கட்சிக்கு ஒரு கோல் (Goal); சிறிலங்கா வெளியேறியதும் எதிரிக்கு ஒரு கோல். ஆட்டம் சமமாக ஓடிப்போகிறதென்று கொள்ளலாம்.

சிறிமா அம்மையாரின் மகன் - இரு பிரதமர்களின் ஒரே மகன் - திரு அனுரா பண்டாரநாயக்கா எதிர்க்கட்சித் தலைவராக நியமனம் பெற்றதும், பந்தாட்டம் சுவைக்காமலிருக்குமென அச்சம் நிலவியது; அவரைப் பற்றிச் சந்தேகமே காரணம்.

இன்று போட்டி அமைதியாகத் தொடர்கிறது. மாவட்ட நிர்வாகத்தையே எதிர்த்த சுதந்திரக்கட்சி, மாநில சுயாட்சியை அல்லது மாகாண ஆட்சியை ஆதரிக்குமா?

எனவே முன்னர் சேர் ஜோன் கொத்தலாவலை சம அந்தஸ்தை வேண்டாமென்றது போல் ஜனதிபதி ஜெயவர்த்தன இன்று மாநில சுயாட்சிக்கோ அல்லது மாகாணசுயாட்சிக்கோ வட்டமேசையில் இடமில்லையென்றுவிட்டார்; ஆட்சிக்கு இன்னொரு கோல்.

இதனைத் தொடர்ந்து சுதந்திரக் கட்சி மிகச் சுறுசுறுப்பாய் விளையாடுவது ஆட்டத்தின் இயற்கை, வடக்கிலும் கிழக்கிலும் ஆட்சி ஸ்தம்பித்துவிட்டது; ஆட்சியாளர் ஆளும் திறமையை இழந்துவிட்டனர்; தனயன் அனுரா 1971ல் தாயாருக்கிருந்த ஆற்றல் இந்த ஆட்சிக்கு இன்றில்லையென்று சொல்லிவருகிறார்.

இதனைத் தொடர்ந்து இன்று வெளிவந்த செய்தி தாயார் ஆட்டத்தில் வெற்றிபெறுவதில் நம்பிக்கை கொண்டிருப்பது போல் தெரிகிறது.

''பயங்கரவாத சந்தேக நபரான திருமதி நிர்மலா நித்தியானந்தன் சிறையிலிருந்து தப்பிச்சென்று இன்று சென்னை நகரில் இருக்கின்றார். இதனைத் தொடர்ந்து அரசாங்கம் பதவியிலிருந்து உடனடியாக ராஜினமாச் செய்திருக்க வேண்டும்'' என்று கண்டியில் பேசியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல; ''1971ம் ஆண்டு இலங்கையில் நடந்த கிளர்ச்சியை மூன்று மாதங்களில் நாம் அப்போது அடக்கினேம்'' என்ற சவாலை மீண்டும் எழுப்பியிருக்கிறார். தாயும் தனயனும் இதனையே வாய்பாடாகச் சொன்னபோதும் போட்டியின் மத்தியஸ்தர் இதற்கொரு கோல் கொடுப்பதாயில்லை. எனவே தொடரும் ஆட்டத்தில் நிர்மலா விவகாரம் எழுப்பப்பட்டிருக்கிறது.

மத்தியஸ்தர்: ''அது குற்றம்'' (Foul) என்கிறார். எவ்வாறென்று விளக்கம் கேட்பின் விடை இவ்வாறு: ''அம்மையாரே! நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்; இந்த ஆட்சியில் குற்றப்படலாம், குடியுரிமை பறிக்கப்படலாம்; ஆனுல் சிறைவாசம் பெறுதலாகாது. கடந்த ஆடி மாதத்தில் 53 சிறைக்கைதிகள் கொல்லப்பட்டதைக் கண்டித்து இவ்வாறு கூறினீர்; இன்று அவ்வித சிறைச்சாலையிலிருந்து தப்பிப்போன பெண்மணிக்கு அனுதாபம் காட்டாது அச்செய்தியை அரசுக்கெதிரகப் பயன்படுத்துகிறீர்'' என்கிறார் மத்தியஸ்தர். அன்று ராஜினமாபற்றிப் பேசவில்லை.

இந்தப் போட்டி இவ்வாறிருக்க தமிழர் பிரச்னை தானகவே தீர்ந்துபோம் என்று மனப்பால் குடிக்கும் ஆட்சியாளரோ அரசியல் தலைவர்களோ நெய்க்குடம் உடைந்துவிட்டதாக நினைப்பது தவறு. இளைஞர்களுக்கும் தலைவர்களுக்கும் உள்வீட்டுப்போர் என்ற பிரசாரம் இதனை நிரூபிக்கிறது.

தீவிரவாதிகள் மிதவாதிகள் என்ற பிரிவுகள் எந்த இயக்கத்திலும் உண்டு. கருத்து வேற்றுமைகள் இடம்பெறும்போதும் தமிழ் மக்களின் விமோசனம்என்ற இலட்சியம் ஒன்றே என்பதால் இதில் பிரிவினை ஏற்படுமென்று நினைப்பது அல்லது அவ்விதபிரிவினை ஆட்சியின் பாரத்தை இலகுபடுத்துமெனக் கருதுவது மடைமை.

இராணுவத்தைப் பொற்கோயிலுக்குள் செல்லும்படி இட்ட கட்டளையைத் தவிர்க்க முடியாத நிலையில் விடுத்ததற்காகத் தம்வாழ்க்கையில் முதன்முறை கவலையால் நித்திரைகொள்ளாத நிலை ஏற்பட்டிருப்பதை இந்தியப் பிரதமர் இந்திரா மிக உருக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

உதைபந்தாட்டத்தை நிறுத்தி பொதுமக்களை வெறும் பார்வையாளராக்காமல், தமிழ் இளைஞர்களை நிரந்தரப் 'பயங்கரவாதிகளாக்காமல்' நல்ல முடிவை நாடுவதே நாட்டுக்கு இன்று தேவைப்படும் அவசரப் பணி.

# இல்வாழ்வை சிறப்பிக்கும் ஆடி அமாவாசை

### தி. பொன்னம்பலவாணர்

மாணவர்க்குக் கல்வி கற்றலும் அரசியற் றலைவர்கட்கு மக்களின் நலன்களைக் கவனித்தலும் பிரதான கடமைகளாக விளங்குதல் போன்று இல்லறவாழ்வில் இருப்போர்க்கு ஐந்துகடமைகள் அவசியமானவை என்று வள்ளுவர் வற்புறுத்தியுள்ளார். இவ்வைந்து கடமைகளில் முதலாவதாக உள்ளது தென்புலத்தார் ஆகிய பிதிரர்களுக்கு உரிய கடமையாகும். தென்புலத்தார் தெய்வம் விருந்து என்று தொடங்கும் குறள்மூலம் இல்லறத்தானுக்கு உரியகடமை வள்ளுவர் வரையறுத்துள்ளார்.

கல்வியில் அக்கறை செலுத்தாத மாணவன் மாணவத்தகுதியை இழத்தல் போல் தென்புலத்தார் கடமைசெய்யாதஇல்லறத்தவன் தனக்குரிய சிறப்பை இழந்துவிடுவான்

கல்வியில் அக்கறைகொண்டு படிக்கும் மாணவன் சிறந்த- கணிக்கத்தக்க மாணவனுதல் போன்று தென்புலத்தார் கடமையைச்சரிவரச் செய்யும் குடும்பத்தவர்கள் சிறப்பான இல்லறவாழ்வை வாழ்வர்.

தென்புலத்தார் கடமைசெய்பவர்களுக்குப் பிதிர்தேவர்களின் நல்லாசிகள் கிடைப்பதால் பண்புடைய மக்கட் செல்வமும் இல்லறவாழ்வில் மகிழ்ச்சியும் உண்டாகும் என்றும். தென்புலத்தார் கடமைச் சிறப்புப்பற்றிக் கூறும் நூல்கள் வலியுறுத்திக் கூறுகின்றன. தென்புலத்தார் கடமை செய்யாமையால் பிதிர்தேவர்களின் சாபத்திற்காளானவர்களின் குடும்பங்களில் அவமரணம், சிசுமரணம், போல்வன ஏற்படும் என்ற கருத்துக்களும் பிதிர் கடமையின் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

பிதிர் கடமை செய்வதற்கு மிகஉகந்தநாளாக ஆடிஅமாவாசை விளங்குகின்றது. மாதந்தோறும் வரும் அமாவாசையே பிதிர்தர்ப்பணம் செய்யவேண்டிய அவசியம் உடையது. ஒருவருடத்தில் தக்ஷியனம் ஆரம்பித்து முதலாவதாகவரும் அமாவாசை ஆடிஅமாவாசையாகும். இத்தினத்தைக் காத்திருந்து தந்தைவழிப் பிதிரர்களைக் குறித்து மிகுந்த சிரத்தையோடு பிதிர்கடன் செய்யவேண்டியது ஒவ்வொரு இல்லறத்தாருக்கும் அவசிய கடமையாகும்.

## மக்கள் கருத்து

### பருந்துக்கு இரையாவதா?

''இளம் கன்று பயமறியாது.'' மகாத்மா காந்தி அடிகளார் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் இவற்றினையெல்லாம் சொல்லி அகிம்சை வழியில் சத்தியாக்கிரகப் போராட்டத்தின்மூலம் பிரிட்டிசாரை வெளியேறக் கோரினுர்கள். அதேநேரத்தில் அகிம்சையில் நம்பிக்கையற்ற சுபாஷ் சந்திரபோஸ் வேறு போராட்டத்தில் ஈடுபடலானுர். ஆனுல் இருவரும் எக்காலத்திலும் நேருக்குநேர் மோதிப் போர்க்கொடி தூக்கியது இல்லை.

இமயம் முதல் குமரி வரை ஆண்ட தமிழர், தமது உட்பகைமையாலும் தலைமைப் பீடப் பித்தினுலும் பிளவுபட்டதால் ஆசியாக் கண்டத்தில் மாத்திரமல்ல இந்தியாவிலேயே சிறுபான்மையினராகியமை எமது இறுதிக்கால சரித்திரம். இவற்றை வளர்ந்து வரும் இளந்தமிழர் சமுதாயம் அறிந்து, உணர்ந்து காலத்திற்கு ஏற்றமுறையில் மதித்து வாழ, வழிநடத்தத்தலையேற்க வேண்டும். இதனைத் தங்கள் சங்கங்கள், சபைகள், இயக்கங்கள் மூலம் எப்படித் தலைவரையும், மூத்தோரையும் மரியாதையாக நடத்த வேண்டும் என்பதை இளைய சமுதாயம் பழகிக்கொள்வது வருங்கால சமுதாய வளர்ச்சிக்கு உதவும்.

ஒருகாலத்தில் இரு தமிழ் கட்சிகள் கடையைப் பூட்டு என்றும், கடையைத் திற வென்றும் போராட்டம் நடத்திப் பிரித்தாளும் ஆட்சியாளரின் சூழ்ச்சிக்கு வெற்றியும் ஈட்டிக் கொடுத்தார்கள். 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற நிலைக்கு உள்ளாகாமல் நாம் ஒருமித்து தமிழர் சமுதாயம் என்ற வகையில் எல்லோரும் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் வேற்றுமையில் ஒற்றுமையுடன் இயங்க நம்மை நாமே தயார்படுத்தும் வரை எமக்கு விமோசனம்ஏற்படமுடியாது. நமது சமுதாயக் குளத்தைக் கலக்கிப் பருந்திற்கு இரை கொடுத்தநிலைக்கு ஆளாகக்கூடாது. இதனை எல்லோரும் கவனத்தில் கொள்வது நன்மை பயக்கும்.

**க. சி. இராஜேஸ்வரன்,**
நல்லூர்.

# ரூ. 10 ஆயிரம் ஒதுக்கீடு

[யாழ்ப்பாணம்]

கிராம அபிவிருத்தி அமைச்சினுல் ஒதுக்கப்பட்ட ரூபா 10 ஆயிரம் கொய்யாத்தோட்டம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியில் ஒரு

(8ம் பக்கம் பார்க்க)

# ஒலிபரப்புகூட்டுத்தாபனத்தில் 7பேர் தற்காலிக வேலைநீக்கம்

[கொழும்பு]

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில், ஏழுபேர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் பணம் கையாடல் சம்பந்தமாகவே இந்த வேலை நீக்கம் நடந்துள்ளது.

லிகிதர் சேவையிலுள்ள இந்த ஏழு ஊழியர் தொடர்பாக குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

50 ஆயிரம் ரூபா கையாடல் குறித்தே இவர்கள் மீது விசாரணை நடக்கிறது.

[இ]

### இன்று கதிர்காமம் கொடியேற்றம்

# கதிர்காமக் கந்தா! அருள் தாராய்!

**குறள் வெண்பா**

கதிர்காமக் கந்தன்றன் காலடிகள் போற்ற
அதிகவருள் செய்வான் அணைத்து.

**விருத்தம்**

கந்தா! கடம்பா!! காங்கேயா!!!
கவின்கதிர் காமத் துறைவோனே!
நந்தாப் புகழ்கொள் தமிழிறைவா!
நற்கதிர் காம நாயகனே!
எந்தாய் தந்தை எல்லாம்நீ!
எங்கள் துயரை அறுப்பாயே!
சிந்தா குலத்தைத் தீர்ப்பாயே!
சீர்கதிர் காமக் கதிரேசா!

—கவியரசு முருகசூரியன்

★ இன்று மாவை முருகன் தீர்த்தோற்சவம்

# சேவற் கொடியுயரும் மாவையிலே

**பல்லவி**

சேவற் கொடியுயரும் மாவையிலே—முருகனை
சேவிக்க வந்திடுவீர் பாவினிலே என்றும் (சேவற்.)

**அனுபல்லவி**

பாவச் சுமையகற்றும் பதியிது காணீரோ
பக்திச் சுவைததும்பும் பதிகங்கள் கேளீரோ
(சேவற்...)

**சரணம்**

ஆவதும் அழிவதும் அவனருளா லன்றோ
அன்புடன் வேண்டிடவே அருள்சுரக்கு மய்யன்
நாவினில் பாடுதற்கு நல்லதமிழ் தந்தவனை
நாடியே கைதொழுதால் நானிலத்தி லேதுகுறை
(சேவற்...)

—எஸ். ஸி. எஸ். சிதம்பரநாதன்

# "இவ்வாண்டு அகதிகள் முகாம் திறக்கும் நிலை ஏற்படாது"

## இரத்மலானையில் அமைச்சர் அத்துலத்முதலி

[இ. கந்தசாமி]

''கடந்த மாதம் ஜூலை 25-ம் திகதி இரத்மலானை விமான நிலையக் கட்டிடத்தில் 40 ஆயிரம் அகதிகளுக்கென அகதிகள் முகாமொன்றைத் திறந்து வைத்தேன், ஆனால் இவ்வாண்டு அவ்விதம் அகதிகள் முகாமொன்றைத் திறந்து வைக்கும் நிலை ஏற்படாது.''

இரத்மலானை மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியத்தை நேற்றுமுன்தினம் தேசியபந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி திறந்து வைத்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இரத்மலானை மக்கள் சேவையையே நோக்கமாகக் கொண்டவர்கள். அவர்களின் நல்லிதயத்தைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.''

டாக்டர் ரஞ்சித் அத்தபத்து பேசுகையில் ''அரசின் தாராள பொருளாதாரக் கொள்கையினால், தனியார் நிறுவனங்களும் மருந்துவகைகளைத் இறக்குமதி செய்கின்றன. அரசின் தாராள பொருளாதாரக் கொள்கையை அரசின் பலஹீனமாக நினைத்தால் அரசு மருந்து இறக்குமதியில் சில கட்டுப்பாடுகளைக்கொண்டு வர நேரிடும்'' என்றார்.

# கோப்பாய் பாடசாலைகளில் திடீர் பரிசோதனைக் குழு!

[கோப்பாய்]

திடீர் பரிசோதனைக் குழு கோப்பாய் வட்டாரப் பாடசாலைகளுக்கு விஜயம் செய்து பாடசாலையின் சகல துறைகளையும் பரிசோதனை செய்தது.

யாழ். மாவட்ட கல்வித் திணைக்கள மேலதிகக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. முருகையன் தலைமையில் சென்றிருந்த இத்திடீர் பரிசோதனைக் குழுவில், திணைக்களகல்வி அதிகாரிகள், வட்டாரக் கல்வி அதிகாரி, சகல பாடத்துறைகளிற்கும் பொறுப்பான கல்வி அதிகாரிகள். நிர்வாகத்துறை அதிகாரிகள் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

அண்மையில் கோப்பாய் கல்விவட்டாரத்தில் உள்ள பாடசாலைகளுக்குச் சென்றிருந்த திடீர் பரிசோதனைக் குழு ஒரேநேரத்தில் பாடத்துறைகளையும், பாடசாலை நிர்வாகத்தையும் பரிசோதனை செய்ததுடன் ஆலோசனையும் வழங்கியது.

''திடீர் பரிசோதனைக்குழு யாழ். மாவட்டத்தில் உள்ள சகல ல்வி வட்டாரங்களிற்கும் விஜயம் செய்து பாடசாலை கல்வி அபிவிருத்தி, நிர்வாக நடைமுறைகள் பற்றிப் பரிசோதனை செய்யத் தீர்மானித்திருப்பதாக'' வடமாநிலக் கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# நாட்டிய ஆசிரியைகளுக்கு நாட்டில் தட்டுப்பாடு!

(இ. கந்தசாமி)

நமது நாட்டில் பரத நாட்டியக் கலையை பயிற்றுவிக்கத் தகுதியானவர்களுக்குபெருத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நடன சங்கீத ஆசிரியைகளுக்கு கல்வி அமைச்சு விண்ணப்பம் கோரி. நேர்முகப் பரீட்சையைச் சமீபத்தில் நடாத்தியது.

நடன ஆசிரியைகளுக்கு 100 இடங்கள் காலியாக இருந்தன. ஆனால் 75 விண்ணப்பங்களே கல்வி அமைச்சுக்குக் கிடைத்தன.

நேர்முகப் பரீட்சையில் இருபத்தைந்து பேரே தகுதி பெற்றனர்.

இந்த எழுபத்தைந்து விண்ணப்பங்களில் சிலர் தனிப்பட்டவர்களிடம் நடனம் பயின்று, அவர்களிடமிருந்து 'டிப்ளோமா' பத்திரத்தைக் கொண்டு வந்திருந்தார்களாம்.

பல்கலைக்கழக,வட இலங்கை சங்கீத சபை போன்ற நிறுவனங்களின் பத்திரங்களைப் பெற்றவர்களும் தகுதியானவர்களாகக் கணிக்கப்பட்டனர்.

ஆனால் சங்கீத ஆசிரியர்களுக்குக் கடும் போட்டி இருந்தது. பலர் விண்ணப்பித்திருந்தார்கள்.

இந்தத் தகவல்களைக் கல்விச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் கலாநிதி ஆ. கந்தையா தெரிவித்தார்.

# நெடுந்தீவில் ஹர்த்தால்

(நெடுந்தீவு)

முழு அளவினதான ஹர்த்தால் நெடுந்தீவிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

தனியார், கூட்டுறவுக் கடைகளும் மூடப்பட்டிருந்ததுடன் இரண்டு நாட்களும் வழமையான அரசினர் பிரயாணிகள் படகும் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை.

மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லவில்லை எனினும் கடற்படையினரால் ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

[வண்ணார்பண்ணை]

காரை நகரில் உள்ள 'நோர்வே போரட்' அபிவிருத்தி நிறுவனம் நடத்தி வரும் கைத்தொழில் பயிற்சி நிலையத்தில்' ஆறுமாதகாலம் பனம் பொருள் உற்பத்திப் பயிற்சி பெற்ற 15 பயிற்சியாளர்களுக்கு பனை அபிவிருத்திச் சபையினால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

அபிவிருத்தி நிறுவன பயிற்சி நிலையத்தில் இந்நிறுவன அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. சிவ- சண்முகதாசன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ,நோர்வே போரட் நிறுவன இயக்குநர் பிரதிநிதி திரு. இக் கே குரோஸ்லன்ட் பயிற்சியாளர்களுக்கு இச் சான்றிதழ்களை வழங்கினார்.

பனை அபிவிருத்தி சபையின் பொது முகாமையாளர் கலாநிதி எஸ். மோகனதாஸ் பொதுநல நாடுகளின் பனைத் தொழில் நிபுணர் திரு. கே. சம்பந்தம். நோர்வே போரட் நிறுவன இயக்குனர் திரு. கெமல்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். இலங்கையின் தென்னை, பனை மூலவளங்கள் பற்றி லாநிதி மோகனதாஸ் நோர்வே பிரதிநிதிகளுக்கு ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினார்.


## முழுமையானது !
## சௌகர்யமானது !

முழு வருடத்து
365 நாட்களிலும்
இரவு பகல் 24 மணி நேரமும்
ஒரு பொழுதும்
தவறுமல் பிசகாமல்
ரெலெக்ஸ் ரெலிபோன் சேவைகளை
குளோபல்
திறம்பட நடாத்துகிறது.

## குளோபல் சேவை

அதி விரைவானது
அதி சௌகர்யமானது
அதி ஆனந்தமானது

குளோபல்

யாழ். தபாற் கந்தோருக்கு அருகாமையில்

ரெலிபோன்: 23015, 23312, 23249.


# ✳ சத்திர சிகிச்சையின்போது மின்சாரம் பாய்ந்து நோயாளி மரணம்

(புதுடில்லி)

சத்திரசிகிச்சை நடந்துகொண்டிருந்தபோது, நோயாளி படுத்திருந்த கட்டிலில் மின்சாரம் திடீரெனப் பாய்ந்ததால் அவர் பரிதாபகரமாக உயிர் நீத்தார்!

புதுடில்லியிலுள்ள ஆஸ்பத்திரியொன்றில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

58 வயதான லால் என்பவருக்கு இருதய ஆப்ரேஷனை டாக்டர்கள் மேற்கொண்டிருந்தனர். நோயாயாளிக்கு 'குளுக்கோஸ்' ஏற்றப்பட்டுக்கொண்டிருந்தது.

'குளுக்கோஸ், போத்தல் செப்புக்கம்பியொன்றில் இணைக்கப்பட்டு இருந்தது அந்தச் செப்புகம்பி நோயாளி படுத்திருந்த கட்டிலோடு முட்டிய நிலையிலிருந்தது.

இருதய ஆப்ரேஷன் மேற்கெண்டிருந்த டாக்டர்களுக்கு திடீரென அதிர்ச்சி ஏற்பட்டது.

ஆப்பிரேஷனின் முக்கிய கட்டம் வரமுன்னர் எப்படி இரத்தம் உறைந்து நோயாளி மரணமானுர் என்பதனைக் கண்டு பிடிக்க அவர்களுக்கு அதிக நேரமாகவில்லை.

'குளுக்கோஸ், செப்புக் கம்பிக்கு மேலே வெளிச்சத்தைக் கொடுத்த 'வயரு'டன் முட்டி மின்சாரம் செப்புக்கம்பிக்குள் நுழைந்து நோயாளியின் கட்டிலுக்குள் பாய்ந்து அவரை முடித்து விட்டது. (இ)

# முல்லைத்தீவு கொலை, கொலை முயற்சி வழக்கு

(வவுனியா)

1977ம் ஆண்டு பொதுத் தேர்தலை அடுத்து நடைபெற்ற முல்லைத்தீவு கொலை கொலை முயற்சி தொடர்பான வழக்கு விசாரணை செப்டம்பர் 18ம் திகதி நடைபெறுமென வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி அறிவித்துள்ளார்.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு.ஜே.ஜி ஆசீர்வாதம் முன் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு பின் மேல் குறித்த திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

1977ம் ஆண்டு ஆகஸ்ட் 4ம் திகதி கொக்குத் தொடுவாய் என்ற இடத்தில் சட்ட விரோதமாக கூடி தவமலர் குரூஸ் என்பவரை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததுடன் நாகமணி தாமோதரம் என்பவரை கொலை செய்ய முயற்சித்தது, கதிரவேல் மாசிலாமணிக்கு காயம் விளைவித்தமை ஆகியன உட்பட ஏழு குற்றச்சாட்டுக்கள் 6பேர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

கந்தையா சிவப்பிரகாசம், முருகுப்பிள்ளை செபமாலை, சிவப்பிரகாசம் சிவஞானசுந்தரம், சுப்பிரமணியம் தர்மகுலசிங்கம், செல்லப்பா சிவானந்தம் ஆகியோரே ஐந்து எதிரிகளும் என்றும் 6ம் எதிரியான துரைசிங்கம் மரணமாகி விட்டார் என்றும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

குறித்த 5எதிரிகளும் குறித்த தினத்தன்று நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பொதுத் தேர்தலை அடுத்து முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் இடம்பெற்ற இரு கட்சி ஆதரவாளர்களுக்கிடையே நடந்த கலகத்தின் போது இக் கொலைச் சம்பவம் நடந்துள்ளது.

மன்றில் எதிரிகளின் சார்பில்சட்டத்தரணிகள் திரு எம். சிற்றம்பலம், திரு, வி. ஸி. மோதிலால் நேரு ஆகியோரும் அரசதரப்பில் சட்டத்தரணி திருகுரொசெட் தம்பையாவும் ஆஜராகியிருந்தனர்.

# யாருடையது?

நல்லூரில் நடைபெற்ற உண்ணாவிரதத்தின்போது ஒரு கைக்கடிகாரத்தை திரு. கா. யோகநாதனும், யாழ். நியூ மார்க்கட்டில் ஒரு திறப்புக் கோர்வையை திரு. கே. குமாரதாசும். 87ஸ்ரீ367 ம் இலக்க மோட்டார் சைக்கிளின் காப்புறுதிப் பத்திரத்தை திரு. த ஜெயசிங்கமும் கண்டு எடுத்து 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# விண்ணக வாழ்வின் நான்காவது ஆண்டு நினைவு தினம்

## செல்வன் சிமியோன் அன்ரன்

மலர்வு: 14-11-1955 உதிர்வு: 28-07-1980



உத்தானமும் உயிரும் நானே என்னில் விசுவாசமாயிருக்கிறவன் இறந்தாலும் பிழைப்பான். (அரு. 11: 25) அன்னாரின் ஆத்மசாந்திக்காக 28-7-84 சனிக்கிழமை காலை 6-45 மணிக்கு யாழ். பேராலயத்திலும், நீர்வேலி பரலோகமாதா (விண்கை அரசி) ஆலயத்திலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

என்றும் அன்புடன் பிரிவாற்றா
பெற்றோர், சகோதரன்,
மைத்துனி, உறவினர்

196/1, குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.

1089

## இன்றைய பலன்

மாதம்—ஆடி
திகதி—13 (28-7-1984)
வாரம்—சனி
திதி—அமவாசை முன்னிரவு 6 மணிவரை
நக்ஷத்திரம்—பூசம் பின்னிரவு 2-36 வரை

மேடம்: திருப்திகரமான மாற்றங்களுக்கு இடமுண்டு, நுட்பமான தொழில் புரிபவர்கள் பாராட்டப் படுவார்கள், திறமையான நடவடிக்கைகளின் மூலம் பணத்தைத் தேடிக்கொள்வீர்கள்.

இடபம்: அறிவுத்தாகம் மேலோங்கி நிற்கும், விருந்தினர்கள் வருகை உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரலாம், எதிர்பாராத பணம் கைக்குவந்து சேரும்.

மிதுனம்: நத்தை வேகத்தில் காரியங்கள் நகர்ந்துகொண்டிருக்கும், மனத் தளர்ச்சி ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

கடகம்: அவசர புத்தியினுல் விபரீதங்கள் விளையலாம், கோபத்தைஅடக்கின் நிலைமை சீர்பெறும், அடக்கமாக இருக்கவும்.

சிங்கம்: மேடைப் பேச்சாளர்கள் இன்று பெரும் புகழ் அடைவார்கள், இனபந்துக்களின் கொண்டாட்டங்களுக்கும் இன்று இடமுண்டாம்.

கன்னி: நினைத்தது நடக்காது, நிதியில் முடக்கமுண்டு, பூமிப் பிணக்குகள் தலைகாட்டும், இன்று அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும்.

துலாம்: இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இன்று நிகழலாம், சிலருக்கு வாகனத் முதலீடு செய்யும் சந்தர்ப்பமும்ஏற்படலாம்.

விருச்சிகம்: மகிழ்ச்சிகரமான தினம், குடும்பத்தில் விருந்தினர் வருகை கலகலப்பை ஏற்படுத்தும், நீண்ட நாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள்.

தனுசு: தூரதேசப் பயணம் துயரத்தைத் தரலாம், வருமானத்தில் வீழ்ச்சி தென்படும், வைத்தியச் செலவிற்கும் இடமுண்டு.

மகரம்: குளிர்மையான சம்பவங்கள் இடம் பெறும், வாழ்க்கையில் வசந்தம் வீசும், களஸ்திரவளியாலும் நன்மைகள் வந்துசேரும்.

கும்பம்: எதிர்பாராத இடத்தில் இருந்து ஆபத்து உருவாகும், இயந்திரங்களுடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவும், அமைதியே நன்று.

மீனம்: இறைவழிபாடு மேலோங்கி நிற்கும், இதயத்தில் அமைதியும் ஏறபடும், முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் ஆதரவு தருவார்.

**திருமலை**
**வே. ரவீந்திரன்**

## வானொலியில் இன்று

காலை

5-30 நாதாஞ்சலி
5-35 தோத்திரமாலை ஸ்ரீசாரதா புஜங்கம்
6-00 சைவநற்சிந்தனை
6-05 கிறிஸ்தவ நற்சிந்தனை
6-10 அறநெறிஆரம்
6-25 நிகழ்ச்சி முன்னேட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப் பாடல்
6-55 போதிமாதவனின் போதனைகள்
7-00 ஆங்கிலபாடம்
7-30 மாகாணச் செய்திகள்
7-35 திருவூஞ்சல்- மாவைச் கந்தன் பேரிற் பாடப் பட்டவை
8-05 வாத்திய விருந்து
8-15 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
8-45 தாளவாத்தியக் கச்சேரி என். ஸ்ரீகாந்தன்
9-15 தமிழ்மூலம் சிங்களம் என். டீ. பீரிஸ்
9-30 நாட்டுப்பாடல் ஞானகுமாரி சிவநேசன்
9-45 தகவல்
10 00 சங்கமம்
10-30 கதைப்பாட்டு- கொண்டைச்சேவல் கு. ராமச்சந்திரன்
10-45 அகில இந்திய வானெலிநிலைய ஒலிப் பதிவு
11-30 மாணிக்கமாலை
11-58 பகல் ஒலிபரப்பு முடிவு

மாலை

6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 ஞானக்களஞ்சியம்
6-30 இசைப்பயிற்சி
6-45 லயவின்யாசம்
7-00 நாட்டுக்கூத்து

இரவு

7-30 உலகச்செய்திகள்
7-40 மெல்லிசைத்தேர்வு
7-45 செய்திச்சுருள்
8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
9,00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள்- பக்திப்பாடல்
9-30 நாடகம்- சுருதி கலைந்த ராகம்- சதாயினி நாகலிங்கம்
10-00 நாதஸ்வர ப்ருந்தா கானம் கே. பி. ராஜ மாணிக்கம் நிலைய வாத்தியக்கோஷ்டியினர்
10-30 கிந்தி பஜன்
11-00 ஒலிபரப்புமுடிவு

## ரூபவாஹினி

மாலை

5-30 பிஜன்ஸ்ரீட் (ஆங்கிலம்)
5-45 'நியூஸ்பைடர் மான்' (ஆங்கிலம்)
6-15 சிறுவர் நாடகம் (சிங்களம்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-16 'ஜெமினிமான்' (ஆங்கிலம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 நாடகம் (சிங்களம்)
9-05 இசைநிகழ்ச்சி (சிங்களம்)
9- 0 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 'ரோமியோ ஜுலியட் சோவியத்பலே நாட்டிய நாடகம்
10-30 உலகச் செய்திகள்
10-35 'சோவியத் பலே' தொடர்ச்சி
11-30 நிகழ்ச்சிகள் முடிவு

# "பொழுது சாய்வதற்குள் வீடுசெல்லவேண்டிய நிலை!"

## மேலதிக கல்விப் பணிப்பாளர் கவலை

[பச்சிலைப்பள்ளி]

''பொழுது சாய்வதற்குள் வீடு சென்றிடவேண்டிய நிலையில் உள்ள தற்போதைய காலகட்டத்தில் மாணவர்களின் கல்வி வளர்ச்சி நிம்மதியாக நடந்திடுமென்று சொல்லமுடியாது''.

வடமாநில மேலதிகக் கல்விப் பணிப்பாளர் திரு.இ.முருகையன் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி உயர்தர மாணவ மன்ற ஒன்றுகூடல் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வைபவம் மாணவர் மன்றத் தலைவர் செல்வன் நா. சந்திரசேகரம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் திரு. முருகையன் தொடர்ந்து உரையாற்றும்போது, ''டிறிபேக் கல்லூரியில் நான் மாணவனுகப் படிக்காதுவிட்டாலும் பல கல்விமான்களையும், அதிகாரிகளையும் ஆக்கிய பழம்பெரும் கல்லூரி.

''காலையில் மெதுவாக ஆரம்பிக்கும்வெடிச்சத்தங்கள் மாலையில் எத்தகைய பயங்கரத்தைக் கொண்டுவருமோ என்று தெரியாத காலகட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறேம்'' என்றுர்.

இவ்வைபவத்தில் பளை மகாவித்தியாலய அதிபர் திரு. அ. பொ. செல்லையா உரையாற்றும்போது, ''மாணவர்கள் நல்ல தேகாரோக்கியம் பெறக்கூடிய உடற்பயிற்சி செய்திடல் வேண்டும். ஆபத்துக்காலத்தில் தற்பாதுகாப்பைத் தேடக்கூடிய பயிற்சிகளைக்கூட மாணவர்கள் பெற்றிருத்தல்வேண்டும்'' என்றுர்.

இவ்வைபவத்தில் கௌரவ விருந்தினர்களாக வண. எஸ். சி. ஆர்பல்ட். வட்டாரக் கல்வி அதிகாரிகள் திரு. கு.சோமசுந்தரம், திரு. ஆர். கே. குலசேகரம், உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராசா, இளைப்பாறிய அதிபர் திரு.பூ.வெற்றிவேலு, திரு. த. இரத்தினராசா ஆகியோர் கலந்து கொண்டார்கள். செல்வி இ. மேரி விஜேதினி நன்றியுரை வழங்கினுர்.

# வவனியாவில் கால்நடை

## அபிவிருத்தி மேலும் விஸ்தரிப்பு

(வவனியா)

வவனியாவில் கால்நடைகள் அபிவிருத்தி தொடர்பான பிரச்னைகளை ஆராய்வவற்கென கிராமிய கைத்தொழில் கால்நடை வளர்ப்பு அமைச்சிலிருந்து உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுஒன்று அண்மையில் வவனியா வந்திருந்தது.

கச்சேரியில் திட்டப் பணிப்பாளர் திரு ரி. இலங்காநேசன் தலைமையில் நடந்த கூட்டத்தில் முக்கியமாக நான்கு விடயங்கள் ஆராயப்பட்டன.

பால் சேகரிப்பு, செயற்கை முறை சினைப்படுத்தல், கால்நடைச் சந்தை, மிருகவைத்திய கட்டிடங்கள் தொடர்பாகவே நீண்டநேரம் ஆராயப்பட்டது. இதனைத் தொடர்ந்து சிலதிட்டங்களும் வகுக்கப்பட்டன.

செட்டிகுளம், நெடுங்கேணி பகுதிகளிலிருந்து பால் சேகரிப்பதற்கு ஆவன நடவடிக்கை எடுப்பதாகவும் இங்கு திட்டமிடப்பட்டது.

வவனியாவில் உலகவங்கியின் நிதியுதவியுடன் கால்நடை அபிவிருத்தி மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

# கார் விபத்தில் விவசாயி பலி!

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியைச் சேர்ந்த 45 வயதான விவசாயி ஒருவர் கார்விபத்தில் பலியானுர்.

அச்சுவேலியைச் சேர்ந் கந்தையா செல்லப்பு என்பவரே பலியானவராகும்.

யாழ்.பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடத்தினுர்.

இறந்தவர் சைக்கிளில் வந்துகொண்டிருந்தபோது எதிரே வந்தகாரொன்றினுல் மோதப்பட்டு விழுந்து மயக்கமடைந்தாரென்றும், உடனடியாக தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுப், பின்னர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானுர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிடப்ட்ட்டு விசாரணை ஒத்திப்போடப்பட்டுள்ளது. (க)

# எழுத்தாளர்களுக்கு பாராட்டுவிழா

### யாழ். இலக்கிய வட்டம் நடததுகிறது

(யாழ்ப்பாணம்)

முதுகலைமானிப் பட்டம் பெற்ற எழுத்தாளர் க. குணராசாவுக்கும் [செங்கை ஆழியான்], டாக்டர் பட்டம் பெற்ற எழுத்தாளர் சி. மௌனகுருவுக்கும் பாராட்டு விழாவை அடுத்த மாதம் 19-ம் திகதி யாழ். நகரமண்டபத்தில் யாழ் இலக்கியவட்டம் நடாத்தவுள்ளது.

யாழ். இலக்கிய வட்டச் செயற்குழுக் கூட்டம் இலக்கிய வட்டத் தலைவர் திரு. சு. சபாரத்தினம்[சசிபாரதி] தலைமையில் நடைபெற்றது. அப்போது இவ் எழுத்தாளர்கள் இருவருக்கும் பாராட்டு விழா நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. மற்றும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

யாழ். இலக்கிய வட்டத்தினுல் நடாத்தப்படும் காலாண்டுச் சிறுகதைத் தெரிவுப் போட்டியுடன் மரபுக் கவிதைப் போட்டியைச் சேர்த்து நடாத்துவதுடன், இம்மாதம் 28-ம் திகதி நடைபெறவிருந்த சிறுகதையரங்கை அடுத்த மாதம் 25-ம் திகதி பின்போடுவதென்றும், அதனுடன் சேர்ந்து இளைய தலைமுறையினரடங்கிய கவிதை அரங்கினையும் நடாத்துவது, சிறுகதை அரங்கிற்குச் செம்பியன்செல்வனும், கவிதையரங்கிற்குக் கவிஞர் வே. குமாரசாமியும் தலைமைதாங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## கருத்தரங்கு

(சாவகச்சேரி)

சர்வதேச சமாதான சேவை இயக்கத்தின் வடபிராந்திய கிளை அடுத்த மாதம் 11ம்,12ம் திகதிகளில் ஆயுள் வேதக்கருத்தரங்கொன்றினை கைதடியில் நடத்தவுள்ளது.

சுமார் ஐம்பது பேர் கலந்து கொள்ளும் இக் கருத்தரங்கில் பிரபல ஆயுள்வேத வைத்தியர்கள் விரிவுரை நிகழ்த்துவர்.

கருத்தரங்கின் இறுதியில் பரீட்சை ஒன்றையும் நடத்தி அதில் சித்தி பெறுபவர்களுக்கு சான்றிதழும் வழங்கப்படவுள்ளது. இப்பரீட்சைக்கு நடுவராக கைதடி ஆயுள்வேத வைத்தியப் பொறுப்பதிகாரி திருமதி இந்திரா சத்தியநாதன் கடமையாற்றுவர்.

## சிரமதானம்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய பாதையொன்று சிரமதானமூல । அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது.

இச் சிரமதான வைபவத்தில் வலிமேற்கு உதவி அரசாங்கஅதிபர் திரு.து. வைத்திலிங்கம்' அபிவிருத்கி உத்தியோகத்தர் திரு. வி. சாம்பசிவம், விசேடசேவை அலுவலர் திரு. ஆ. பஞ்சாயுதன் ஆகியோர் உட்பட சுமார் 35 இளைஞர்கள் பங்குபற்றினுர்கள்.

# தமிழ்மொழி உபயோகம்: சுகாதாரப்பகுதி நடவடிக்கை

[பண்டத்தரிப்பு]

தமிழ்மொழி உபயோகம்பற்றிய ஏற்பாடுகளை அமுலாக்குவது தொடர்பாக அண்மையில் யாழ் அரசாங்க அதிபர் வெளியிட்ட சுற்று நிருபத்திற்கிணங்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ் பிரதேச சகாதார சேவைப் பணிப்பாளர் தமது பிரிவிலுள்ள சகல நிறுவனத் தலைவர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையென்றில் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக யாழ் மாவட்டத்திலுள்ள சகல அரசினர் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகள், சுகாதாரத் ம்ணைக்கள நிறுவனத் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேற்படி சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''யாழ் மாவட்டச் செயலாளரும், அரசாங்க அதிபரும் 84-ம் இலக்க 26-06-84 திகதிய சுற்றறிக்கையின்மூலம் தமிழ் மொழியின் அலுவலக உபயோகம் தொடர்பாக அரசியல் அமைப்பின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துமாறு சகல அரசாங்க நிறுவனங்களையும் கேட்டுள்ளார்

தயவுசெய்து மேற்படி ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்''.

**சாந்தி** (யாழ். நகர்)
25 — 28
தினசரி: 10-30, 2-30, 6-30
ரஜனி — ஸ்ரீதேவி
**மூன்று முடிச்சு**
புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
4-30, 7-00
Shakey's
Machine

**ராணி** (யாழ். நகர்)
இன்னும் சில தினங்கள்
மட்டும்
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி -சரோஜாதேவி
**இருவர் உள்ளம்**
1-8-84 முதல்
**அன்புச் சகோதரர்கள்**

**ராஜா** (யாழ். நகர்)
28 - 30-7-84
Daily
10-30, 2-30, 4-30, 7-00
Richard Dreyfuss
in
WHOSE LIFE IS IT
ANYWAY
(Color-கண்டிப்பாக வயது
வந்தவர்களுக்கு)

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
**கைநிறையகாசு**
Coming soon
BURNING


**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-30, 4-30, 7-00
Clint East wood in
**FIRE FOX**

**ஹரன்** (யாழ். நகர்)
10-30, 12-30, 2-30
4-30, 6-30, 8-30
Sylvia Kristel
Nicholas Clay in
LADY CHATTERLEY'S
LOVER
(strictly for adults)
கண்டிப்பாக வயது
வந்தவர்களுக்கு மட்டும்
கொழும்பில் 130 நாட்கள்
ஓடி சரித்திரம் படைத்த
ஆங்கில திரைக்காவியம்

**வின்சர்** (யாழ். நகர்
தினசரி 5 காட்சிகள்
கடைசி இரு தினங்கள்
Armand Assante
Barbara Carrera
எதிர்பாராத தாக்கங்
களும்-இன்பக் கிளர்ச்சி
யும் நிறைந்த ஆங்கி
லப்படைப்பான
**'I The Jury'**
பார்க்கத் தவறாதீர்கள்.
(கண்டிப்பாக வயது
வந்தவர்களுக்குமட்டும்)

மீண்டும் ...கடைசித்
தடவையாக
**றீகல்**(யாழ். நகர்)
25th to 29th
Henry Febar...
EYE OF THE NEEDLE
ஜேம்ஸ் பொன்ட் படத்
தைப் பார்ப்பதுபோன்ற
பிரமை. .எதற்கும் கலவ
ரப்படாமல் கச்சிதமாக
காரியத்தை முடிக்கும்
பயங்கரமான ஒற்றன்.
ஜேர்மனிய இரகசிய உள
வாளியின் நடவடிக்கை
கள் - விறுவிறுப்பு - சஸ்
பென்ஸ்
Adults Only

# 15 வயதுக்குட்பட்டோர் சாம்பியன்



யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் வடமாகாண ரீதியில் நடாத்திய 15 வயதிற்குட்பட்டோர் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சாம்பியன் கேடயத்தைப் பெற்ற யாழ். இந்துக் கல்லூரிக் கோஷ்டி இந்தச் சுற்றுப் போட்டியில் கலந்து கொண்ட ஐந்து ஆட்டங்களிலும் யாழ். இந்து அணி வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

## சனசமூக நிலையங்களும் மூடப்பட்டன

(கல்வியங்காடு)

கல்வியங்காடு அரியாலைப் பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்கள் யாவும் இரண்டு தினங்கள் மூடப்பட்டன.

இந்தச் சனசமூக நிலையங்கள் நடத்தும் சிறுவர் பாடசாலைகளும் தனியார் நடத்தும் பாலர் பாடசாலைகளும் கூட நடைபெறவில்லை.

ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவுக்குமுக ாகவே இவை பூட்டப்பட்டிருந்தன.

## கஞ்சா பிடிபட்டது

(திருகோணமலை)

பதின்மூன்றரை றாத்தல் கஞ்சாவை வைத்திருந்த ஒரு நபர் திருமலைப் பொலிஸாரிடம் சிக்கினார்.

இரகசிய தகவல் ஒன்றைத் தொடர்ந்து உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கமிஸறிஸ் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி நகரில் உள்ள வீடொன்றைச்சோதனையிட்ட போதே இப் பெருந்தொகையான கஞ்சா சிக்கியது.

தெல்தெனியாவைச் சேர்ந்த ஆறுமுகம் வேதநாயகம் என்பவரை இது சம்பந்தமாகக் கைது செய்து திருமலை நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர் செய்தனர்.

எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து நீதவான் 750 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பு அளித்தார். கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி: ஏமாற்றியவர் மீது வழக்கு

(திருகோணமலை)

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி இரண்டு திருமலை இளைஞர்களிடம் 36,000 ரூபா பணத்தை மோசடி செய்ததாகக் கூறப்படும் கொழும்புவாசி ஒருவர்மீது திருமலைப் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

திம்பிரிகஸ்ஸாயாவில் உள்ள வீடமைப்புத்திட்ட வீடு ஒன்றில் வசிக்கும் சபாரத்தினம் பாக்கியநாதன் என்பவர் மீதே திருமலை நீதவான் திரு. ஹேமால் சேனரத்ன முன்னிலையில் இவ்வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இரண்டு வழக்குகளிலும் தான் குற்றவாளி அல்ல என்று எதிரி கூறினார்.

இதைத்தொடர்ந்து விசாரணை அக்டோபர் 1ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

1வது வழக்கில் ஜெயதேவன் என்பவருக்கு வெளிநாட்டில் தொழில்பெற்றுக் கொடுப்பதாகக்கூறி அவரின் தந்தையாரான செல்லையா லட்சுமணன் என்பவரிடமிருந்து 18,000 ரூபாவைப் பெற்று ஏமாற்றி மோசடி செய்தது

2வது வழக்கில் வெளிநாட்டு உத்தியோகம் பெற்றுத் தருவதாகக் கூறி கும்புறுப்பிட்டி இளைஞரான எஸ். பாலேந்திரதாஸ் என்பவரிடமிருந்து18000 ரூபாவைப் பெற்று ஏமாற்றியதாகவும் எதிரிமீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சார்ஜன்ட் சங்கரலிங்கம் குற்றப்பத்திரிகைகளைத் தாக்கல்செய்தார். எதிரி பிணையில் விடப்பட்டுள்ளார்,

## ஆலயபரிபாலன சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை, கரம்பொன் கண்ணகையம்மன் கோவில் பரிபாலன சபை தெரிவுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டத் தீர்மானத்தின்படி பரிபாலன சபை உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட இருப்பதாக தலைவர் திரு நா. மு. சரவணமுத்து தெரிவித்தார்.

## மகளிர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ஆ. குணநாயகம், தொழில் அதிகாரி திரு. எஸ். சிவசுப்பிரமணியம், மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். நிரஞ்சன் உட்பட பலர் இங்கு கருத்துரை வழங்கினார்கள்.

இலங்கை குடும்பத்திட்ட சங்கத்தின் அனுசரணையுடன் வவனியா மாவட்ட குடும்ப நல குழு இக்கருத்தரங்கை ஏற்பாடுசெய்திருந்தது. திட்ட அதிகாரி திரு. எஸ். ஜெகதீஸ்வரன் இதுதொடர்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**மனோகரா**(யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30 6-30
ஜெமினி - சரோஜாதேவி
**கல்யாண பரிசு**

# வடக்கு-கிழக்கில் ப.நோ.கூ. சங்கங்களுக்கான புதிய திட்டம்

(வவனியா)

வடக்கு-கிழக்கு பலநோக்கு கூட்டுறவு சங்க பொதுமுகாமையாளர்களுக்கான அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கான திட்டங்கள் ஆராயப்பட்டுள்ளன.

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு வடக்கு- கிழக்கு பகுதி பொதுமுகாமையாளர்கள் ஒன்றிணைந்த அங்குரார்ப்பண அமைப்பு கூட்டம் வவனியா கூட்டுறவு கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

வவனியா, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம்' கிளிநொச்சி பகுதிகளிலிருந்து கணிசமான பொதுமுகாமையாளர் வந்திருந்த போதும், கிழக்குப் பிராந்தியத்திலிருந்து நாட்டின் சூழ்நிலை கருதி எவருமே கலந்து கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு பிராந்தியத்திலிருந்து எவரும் கலந்து கொள்ளாததினால் ஒன்றிணைந்த கூட்டம் நடைபெறாத போதிலும் முக்கிய சில விடயங்கள் ஆராயப்பட்டு திட்டமிடப்பட்டதாக தற்போதைய செயலாளர் திரு. க. சபாரத்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பான கூட்டம் விரைவில் முழுமையாக நடைபெறும் எனவும், காலக்கிரமத்தில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அறிவிக்கப்படுமெனவும் இவர் மேலும் தெரிவித்தார்.

## பயிற்சி வகுப்புகள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு வை.எம்.சி.ஏ இயக்கம் இப் பகுதியிலுள்ள வசதிகுறைந்த யுவதிகளின் நலன் கருதி இலவச தையல், பன்னவேலை பயிற்சி வகுப்புகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

இப் பயிற்சி வகுப்புகளுக்கென சுமார் 16ஆயிரம் ரூபா செலவில் நான்கு தையல் மெஷின்களும், மற்றும் உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாக பண்டத்தரிப்பு வை.எம்.சி.ஏ யின் தலைவர் ஆசிரியர்.எஸ்.இரத்தினவேல் தெரிவித்தார்.

## சுந்தரர் இல்லம் சாம்பியன்

(மட்டுவில்)

நாவற்குழி மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில், போட்டியிட்ட மூன்று இல்லங்களில், சுந்தரர் இல்லம் சாம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது.

நாவற்குழி மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் அதிபர் திரு.எஸ்.•ன்.நாகராஜா தலைமையில் நடைபெற்றது.

சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு.கு.சோமசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இப் போட்டிகளில் சுந்தரர், அப்பர் சம்பந்தர் இல்லங்கள் போட்டியிட்டன.

மண்ணில் இருந்து விண்ணிற்கு
அஞ்சலி '84



அமரர் பொன்னையா கதிரவேலு
( 18-4 - 1916 — 28 - 7 - 1983 )
மதச் சடங்குகள் 15 - 8 - 84 ல்
இலண்டனில் நடைபெறும்.
902

# இந்திராவின் வாழ்வில் தூக்கமில்லாத இரவுகள்!

புதுடில்லி, ஜூலை 27

''பஞ்சாப் சீக்கியத் தீவிர வாதிகளை முறியடிக்க இராணுவத்தை அனுப்புவது என்று எடுத்த முடிவையடுத்துப் பலஇரவுகளை தூக்கமின்றி நான் கழித்தேன். அப்போது நான் இருந்த நிலையை எனது சகாக்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளமுடியும்'' என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

பஞ்சாப் பொற்கோயில் வளாகத்தின் சீக்கிய தீவிர வாதிகளை முறியடிக்க இராணுவத்தை அனுப்பிவைத்தது குறித்து விளக்கமளித்த போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

திருமதி. இந்திரா காந்தி தொடர்ந்து கூறியதாவது;

''பஞ்சாப் சீக்கியவாதிகளை முறியடிக்க அங்குஇராணுவத்தை அனுப்புவதைத் தவிர வேறு வழிஎதுவும் இருக்கவில்லை இராணுவத்தைத் அனுப்பும் முடிவைத் தொடர்ந்து நான் நிம்மதியற்றிருந்தேன்.

''எனது வாழ்க்கையிலேயே அம்முடிவையடுத்தே முதல் தடவையாக நான் பல இரவுகளைத் தூக்கமின்றிக் கழித்தேன். இதுபற்றி எனது சகாக்கள் மூலமாக நன்கு தெரிந்து கொள்ள முடியும்'' என்றார்.

பஞ்சாப்பிலிருந்து இராணுவத்தை உடனடியாக வாபஸ்பெறவேண்டுமென்ற கோரிக்கையை திருமதி காந்தி நிராகரித்தார்.

''இராணுவம் கூடிய விரைவில் அங்கிருந்தும் வெளியேற வேண்டும். ஆனால் அங்கு மக்கள் பாதுகாப்பாக இருக்கும் நிலையைத் தோற்றுவிக்கவேண்டிய பொறுப்பு எம்மிடம் இருக்கிறது'' என்று அவர் குறிப்பிட்டார். (கி)

## ஆய்வுமன்றம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் சோதிட ஆய்வு மன்றத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. (கெ)

## கலைவிழா

(வவனியா)

வவனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலய சிறுவர்களுக்கான கலைவிழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

வவனியா இறம்மைக்குளம் புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை அருட்திரு அல்பன் ராஜசிங்கம் கலைவிழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்,

## இப்படியும் நடக்கிறது

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ்ப்பாணம் ஒலிபரப்பு நிலையம், அதாவது மண்டைதீவு ஒலிபரப்பு நிலையத்துக்கு என்ன நடந்தது?

வழக்கமாக கணீரென்று ஒலிக்கும் இலங்கை ஒலியரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சிகளை வழக்கமான அலைவரிசையில் இப்போது கேட்க முடியவில்லை!

காரணம்- தொழில்நுட்பக் கோளாறு? அல்லது இருட்டடிப்பா?

இப்பொழுதெல்லாம் பல வீடுகளில் சென்னையும் திருச்சியும்தான் கூடுதலாக ஒலிக்கிறது!

-ஊடுருவி

# லாஸ்ஏஞ்சல்ஸில் 23வது ஒலிம்பிக்ஸ் போட்டிகள் இன்று ஆரம்பம்

(லாஸ்ஏஞ்சல்ஸ்)

23வது ஒலிம்பிக் போட்டிகள் அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸில் இன்று ஆரம்பமாகிறது. இப்போட்டிகள் ஆகஸ்ட் 12ம் திகதிவரை நடைபெறும்.

141 நாடுகள் கலந்துகொள்ளும் இப்போட்டியில் 10,000க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்குபற்றுகின்றார்கள். 10,000 பொலிசார் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆயினும் அரசியல் காரணமாக சோவியத் யூனியனும் அதன் சார்பு நாடுகளும் இப்போட்டியில் கலந்துகொள்ளவில்லை. குறிப்பாக ஒலிம்பிக் போட்டிகளின் முதன்மை நாடுகளான சோவியத் யூனியன், கிழக்கு ஜேர்மனி. செக்கோஸிலோவேக்கியா, பல்கேரியா. கியூபா ஆகியவை கலந்து கொள்ளவில்லை.

இப்போட்டியில் இஸ்ரேலிய வீரர்களுக்கு பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. 1972ம் ஆண்டு மேற்கு ஜேர்மனியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 11 இஸ்ரேலிய வீரர்கள் கொல்லப்பட்ட பின் முதல்தடவையாக இந்த ஒலிம்பிக் போட்டியில்தான் இஸ்ரேலிய வீரர்கள் கலந்து கொள்கின்றார்கள்.

23-வது இந்த ஒலிம்பிக் போட்டியில் 24 போட்டிகள் 23 விளையாட்டு அரங்குகளில் நடைபெறுகின்றன.

ரஷ்யாவின் நேசநாடுகளில் ஒன்றான ருமேனியா இப்போட்டியில் பங்குபற்ற 122 வீரர்களை அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ரஷ்யா இந்த ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றாது விட்டாலும் இப்போட்டிக்கு மத்தியஸ்தம் வகிப்பதற்கு அந்நாட்டிலிருந்து 130 பேர் சென்றுள்ளார்கள். (வி-சூ)

## இன்று

(வேலணை)

வேலணை வங்களாவடி அருள்மிகு முருகப்பெருமான் இன்று முதல் முதலாக வேலணை வெள்ளைக்கடற்கரைக்கு தீர்த்தமாடச் செல்கின்றார்.

சென்றகாலங்களில் ஏற்பட்ட கலவரங்களின் பின் வேலணை வெள்ளைக் கடற்கரையில் தீர்த்தமாட வருபவர்களின் தொகை அதிகரித்து வருகின்றது தீர்த்தமாட வருவோர்களுக்கு வேலணை இந்து வளர்ச்சிக்கழகமும், வேலணை இந்து இளைஞர் மன்றமும் இணைந்து பலவசதிகளை செய்திருக்கின்றது.

## நியமிக்க கோரிக்கை

[சித்தன்கேணி]

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அராலி தெற்கு கிழக்குப் பிரிவிற்கு நிரந்தரமான கிராம சேவை அலுவலரை நியமனம் செய்யுமாறு அப்பகுதியிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களும், மற்றும் பொது ஸ்தாபனங்களும் உதவி அரசாங்க அதிபருக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும் கோரிக்கைவிடுத்துள்ளன.

கடந்த பலமாதங்களாக இப்பிரிவிற்குக் கிராமசேவை அலுவலர் நியமிக்கப்படாமையினால் பொதுமக்கள் தமது அத்தியாவசியமான வேலைகளைச் செய்வதற்குச் சிரமப்படுவதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரூபா 10,000.....

[5ம் பக்கத் தொடர்ச்சி]

தையல் யந்திரம் வாங்கவும் மிகுதிப் பணத்தின் மூலம் துணிகள் வாங்கி ஆடைகள் தைத்து விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.


## மரண அறிவித்தல்

### திருமதி திரேசா தேவசகாயம்

### (கரவெட்டி)

சமாதான நீதவானும், முன்னாள் நெல்லியடி நகர சபைத் தலைவரும் மாவட்ட நீதிமன்ற சக்கடத்தாருமாகிய தேவசகாயத்தின் அன்பு மனைவி திரேசா 27-7-84இல் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் காலமானார். இவர் திருமதி கனகமணி ஜெயராஜா, நவரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும், முன்னாள் அஞ்சல் அதிபர் ஜெயராஜா, திருமதி ராணி நவரத்தினத்தின் மாமியாரும், திருமதி ஜெயந்தி இமானுவேல்(U.K), விஜயகுமார்(U.K), ஜெயஞானம் (Italy) ஸ்ரீகுமார் (France), திருமதி வசந்தி கிருஷ்ணபவான், சாந்தி, சதீஷ்குமார், மனோஜ் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார். அன்னாரின் ஈமைச்சடங்குகள் 28-7-84 சனிக்கிழமை மாலை 4மணிக்கு அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக குடும்ப சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும். 1084



## மரண அறிவித்தல்

### முத்துக்குமாரு கந்தசாமி

மூளாயைச் சேர்ந்த முத்துக்குமாரு கந்தசாமி (இளைப்பாறிய நீர்ப்பாசன உத்தியோகத்தர்) காலமானார்.

இவர் லீலாவதியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற முத்துக்குமாரு, நல்லம்மாவின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற Dr. தில்லையம்பலம், திருமதி தில்லையம்பலம் (மலேசியா) ஆகியோரின் மருமகனும், பத்மா Canada), ஜீவா (Australia), தேவகுமார் (Canada), சாந்தி (England), வசந்தி, காமினி, பிரேம்குமார் (W. Germany) ரோகினி வினித்தா, ரவிக்குமார் ஆகியோரின் அன்புத்தந்தையும் துரைச்சாமி (Canada) N. T. ராஜலிங்கம் (Australia), சிவநேசன் (England), தர்மதயாளன், குமரகுரு மனோகரன், அமரசூரி ஆகியோரின் மாமனாரும். நிரஞ்சன், சுகு, கண்ணன், ரஜனி, Joy, மோகன பிரவீண ஆணல் ஆகியோரின் அன்பு பேரனுமாவார். அன்னாரின் ஈமைக்கிரிகைகள் 27-7-84 அன்று நடைபெற்றது.

இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும். 1100


## முதலில்உண்ணு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இரா. சம்பந்தனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்காக திரு. சம்பந்தன் நேற்று மாலையே திருகோணமலைக்கு புறப்பட்டுவிட்டார் என்றும் அடுத்த வாரத்தில் வரும் ஒரு நாளில் கிழக்கு மாகாணத்தில் ஒருதொகுதியில் கூட்டணியினர் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற சர்வ கட்சிமகாநாட்டில் அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள 'இரண்டாவது சபை' யோசனைகள் குறித்து கூட்டணியிடம் அரசாங்கத்தால் கேட்கப்பட்ட அபிப்பிராயம் குறித்து மகஜர் ஒன்று தயாரிப்பது குறித்தும் நடவடிக்கைக்குழு ஆலோசனை செய்யும் என்றும் அதற்கு கொழும்பில் வைத்தே மகஜர் தயாரிக்கப்படும் என்றும் கூட்டணிப் பிரமுகர் சொன்னார்.

இம்மகஜர் தயாரிப்பதற்காக ஆகஸ்ட் முதலாம் திகதி கூட்டணித் தலைவர்கள் கொழும்பு் செல்லவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (மா)

## இயக்கத்தின்...

(1-ம் பக்கத் தெடாச்சி)

மிரட்டினர்.

இம்மிரட்டலைத் தொடர்ந்து வீட்டிலிருந்த சுமார் ஒரு லட்சத்து 629 ரூபா பெறுமதியான 45 பவுண்கள் நகையை அம்மூன்று நீளக்காற்சட்டை அணிந்த இளைஞர்களும் கொள்ளையடித்துச்சென்றனர்

இவர்கள் மோட்டார் சைக்கிள் ஒன்றிலேயே சென்றதாகவும், கொள்ளை இடம்பெற்றபோது வேறு ஒரு மோட்டார் சைக்கிளிலும் வெளியே இவர்களின் சகாக்கள் சிலர் நின்றிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கொள்ளைச் சம்பவம் பற்றி கிளிநொச்சிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது பொலிஸ்பொறுப்பதிகாரி பி. ஏ சுகததாஸா, சப்இன்ஸ்பெக்டர் ஸ்டனிஸ்லாஸ் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி இச்சம்பவம்பற்றிய புலன்விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (கி)

## நிலைமை வழமையானது....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சந்தி ஆகியவற்றை உள்ளடக்கி இராணுவத்தினர் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர்.

யாழ். பஸ்நிலையத்தில் நின்ற அத்தனை பிரயாணிகளும் சுற்றி வளைக்கப்பட்டு கடுமையாக சோதனையிடப்பட்டனர்.

வயது வித்தியாசமின்றி சகலரும் சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன், விசாரணை செய்யப்பட்டனர்.

அடையாள அட்டை வைத்திருந்தவர்களும் குறிப்பிட்ட நேரம்வரை வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தனர்.

வாகனங்களும்தடுத்து நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டதால், பிரயாணம் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

கடைகள், வியபார ஸ்தலங்களுக்குள் நின்றவர்களும் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர்.

நண்பகல் நேரம் திடீர் சோதனை இடம்பெற்றதால் யாழ். நகர மக்கள் தங்கள் மதிய உணவு தயாரிப்பதற்கான மரக்கறி வகை மற்றும் உணவுப் பொருட்களை யாழ். நகரச் சந்தையிலோ, கடைகளிலோ பெறமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சோதனை ஆரம்பித்து, நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை, வாகனம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த ஒலி பெருக்கி மூலம் பொதுமக்களுக்கு நற்போதனை அளிக்கும் விதத்தில் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

பொதுமக்களே; பீதியடைய வேண்டாம், நீங்கள் நடமாடும் பொழுது உங்கள் அடையாள அட்டைகளையும் எடுத்துச் செல்லுங்கள் என்றும்; இளைஞர்களை நல்வழிப் படுத்துங்கள் என்றும் ஒலி பெருக்கிமூலம் அறிவிக்கப்பட்டது.

இவ்வாறெல்லாம் நடைபெற்ற சோதனை, சுமார் 2-30 மணிக்கு முடிவுற்றது.

இதனைத்தொடர்ந்து பொதுமக்கள் மீண்டும் தங்கள் கருமங்களில் சுறுசுறுப்புடன் ஈடுபடத் தொடங்கினர்.

### மட்டக்களப்பு திருகோணமலை

மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் பகுதிகளிலும நேற்று வழமைபோல் மக்கள் கடமைகளில் ஈடுபட்டனர். இ. போ. ச. பஸ்கள், தனியார் பஸ்களின் சேவைகளும் இடம் பெற்றன. பாடசாலைகள் அரசாங்க அலுவலகங்களிலும் மாணவர்கள், ஊழியர்கள் வரவு திருப்திகரமாக இருந்தது. கடைகள் திறக்கப்பட்டு வியாபாரம் வழமைபோல் நடைபெற்றது. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நேற்று எந்த விதமான அசம்பாவித சம்பவங்களும் இடம் பெறவில்லை. (மா)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூலை மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.